# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 093 · வியாழக்கிழமை Thursday · 02.07.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# த.வெ.க. தலைமையில் புதிய கூட்டணி?

## ஆதரவு கட்சிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை



தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க. 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. தேர்தலுக்கு முன் த.வெ.க.வுடன் கூட்டணி அமைப்பவர்களுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்கு உண்டு என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் யாரும் கூட்டணி அமைக்காத நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியான உடன் முதல் கட்சியாக காங்கிரஸ் கட்சி த.வெ.க.வுக்கு ஆதரவு தெரிவித்து கூட்டணியை உறுதிப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்தியயூனியன் முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் த.வெ.க. கூட்டணியில் இணைந்தன. கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் ம.தி.மு.க.வும் த.வெ.க. கூட்டணியில் இணைவதாக அறிவித்துள்ளது. அதே நேரம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பலர், தங்களது பதவியை ராஜினாமா செய்துகொண்டு த.வெ.க.வில் இணைந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்துள்ள கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து தங்கள் கூட்டணிக்குநல்லஒருபெயரை சூட்டி, தங்கள் கூட்டணியை வலுப்படுத்தி, 5 ஆண்டுகள் ஆட்சியை இடையூறு இல்லாமல் கொண்டு செல்ல முதல்-அமைச்சர் விஜய் முடிவு செய்துள்ளார்.

இதற்காக சென்னையை அடுத்த கோவளத்தில் அமைந்துள்ள 'பிஷர்மேன்ஸ் கோவ் ரிசார்ட்'டில் முதல்-அமைச்சரும், த.வெ.க. தலைவருமான விஜய் தலைமையில் ஆதரவு கட்சித் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் (புதன்கிழமை) மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது. இது ஆட்சி அமைந்தபின் த.வெ.க. தலைமையில் நடைபெறும் முதல் கூட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தகூட்டத்தில்,அரசு அமைவதற்கும், ஆட்சி செயல்பாடுகளுக்கும் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும்தோழமை கட்சித் தலைவர்களுக்கு முதல்-அமைச்சர் விஜய் தனது நன்றியை நேரில் தெரிவிக்க உள்ளார். மேலும், த.வெ.க. தலைமையில் மாநிலத்தில் ஒரு வலுவான, முறையானமதச்சார்பற்றகூட்டணியை அதிகாரப்பூர்வமாக கட்டமைப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டு கூட்டணிக்கான பெயர் சூட்டு விழாவும் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.அதற்காக 'மதசார்பற்ற சமூகநீதி கூட்டணி', 'தமிழ்நாடு முற்போக்கு சமூகநீதி கூட்டணி' என்றபெயர்களும்பரிசீலனையில் இருப்பதாகவும்கூறப்படுகிறது.இந்த கூட்டத்தில் காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க. மற்றும் ஐ.யூ.எம்.எல். கட்சிகள் பங்கேற்க உள்ளன. த.வெ.க.அரசுக்குவெளியில் இருந்து மட்டுமே ஆதரவு அளிப்பதால், கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என்று இடதுசாரிகள் அறிவித்துள்ளன. மேலும் கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்களும் கலந்து கொள்ள உள்ளனர். முக்கிய ஆலோசனைகள்

இந்த கூட்டத்தில், கூட்டணிக்கு என தனியாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் செய்யப்படுவதுடன் பொதுவான வழிகாட்டுதல் குழுவும் உருவாக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இது தவிர, வரவிருக்கும்உள்ளாட்சி தேர்தல்கள், சட்டமன்ற இடைத் தேர்தல்களை கூட்டணி கட்சிகள் இணைந்து எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த முக்கிய ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், காவிரி விவகாரம், மேகதாது அணை பிரச்சினை, இருமொழிக் கொள்கை உள்ளிட்ட மாநில உரிமைகள் சார்ந்த முக்கிய பிரச்சினைகளில்கூட்டணி கட்சிகளின் கருத்தையும் கலந்து ஆலோசித்து ஒன்றிணைந்துசெயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது. இது தவிர கூட்டணி கட்சிகளின் விருப்பங்கள் என்னென்ன இருக்கிறது. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாத்தியக்கூறுகள் என்னவென்றும் ஆலோசிக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

# தமிழக அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பு: த.வெ.க. அரசை கவிழ்க்க தி.மு.க. குதிரை பேரம் நடத்தியதா? அதிர்ச்சி தகவல்





தமிழக அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பாக, த.வெ.க. அரசை கவிழ்க்க தி.மு.க. குதிரை பேரம் நடத்தியதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் நடந்து முடிந்த 17-வது சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்கவில்லை. அரசியலுக்கு புது வரவான த.வெ.க. 107 இடங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில், தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்த காங்கிரஸ் (5), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு (2), இந்திய கம்யூனிஸ்டு (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), இந்தியயூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது.

ஆனால், இடைப்பட்ட நேரத்தில், தமிழகத்தில் எதிரும்.. புதிருமாக இருக்கும் இருபெரும் திராவிட கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்க முயற்சித்ததாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியாகின.

அதற்குள், த.வெ.க.வும் கூட்டணி ஆட்சி அமைத்ததுடன், ஆட்சியிலும் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளுக்கு பங்கு கொடுத்தது. அத்துடன், தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி பரபரப்பும் முடிவுக்கு வந்தது.

அதன்பின்னர், தமிழக சட்டசபையிலும் த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் 25பேர் ஆதரவாக வாக்களித்ததும் சர்ச்சை ஆனது. அந்த நேரத்தில் கருத்து தெரிவித்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், தி.மு.க. - அ.தி.மு.க. ஆட்சி அமைக்க கூட்டணி பேசியது உண்மை என்று அதிரடியாக குற்றம்சாட்டினார். தற்போது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீனும் அதை ஆமோதித்துள்ளார். இது தொடர்பாக, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினே தன்னுடன் போனில் பேசினார் என்றும் பரபரப்பு தகவலை வெளியிட்டார்.

இப்படி, தமிழக அரசியலில் தினம் ஒரு பரபரப்பு தகவலாக வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில்,

உச்சகட்ட பரபரப்பாக, த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க அக்கட்சி எம்.எல்.ஏ.க்களை தி.மு.க. விலைக்கு வாங்க முயன்றதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊத்தங்கரை தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ.இளையராஜாவிடம் தி.மு.க. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரான திருநாவுக்கரசர் என்பவர் போனில் தொடர்பு கொண்டு,தமிழகசட்டசபையில் சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் கொண்டுவர உள்ளதாகவும், ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும் அத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போதுதங்களுக்கு சாதகமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும், அதற்கு சன்மானமாக ரூ.35 கோடி வரை தருவதாகவும் ஆசைவார்த்தைகூறியுள்ளார். இது தொடர்பாக, த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜாபோலீசில் புகார் அளித்துள்ளார். இதேபோல், மேலும் 14 த.வெ.க. எம்.எல்.ஏ.க்களிடம் பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

த.வெ.க. அரசை கவிழ்க்க தி.மு.க. முயற்சி மேற்கொண்டது உண்மைதானா? என்று போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இது ஒரு பக்கம் இருக்க, கடந்த சில தினங்களுக்கு முன்பு கட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், "தமிழகத்தில் தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். 100 சதவீதம் தயாராக இருங்கள்" என்று நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த நிலையில்தான்,கடந்தமாதம் 29-ந் தேதி சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் கவர்னர் அர்லேக்கரை கிண்டி மக்கள் மாளிகையில் சென்று சந்தித்தார். அவருடன் அமைச்சர்கள் நிர்மல்குமார், விஸ்வநாதன் ஆகியோர் சென்றிருந்தனர்.

ஆனால், இந்த திடீர் சந்திப்பு ஏன் நடந்தது? என்று அப்போது எதுவும் தகவல்கள் வெளியாகவில்லை.

அதற்கான காரணம் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சட்டசபையில்சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் கொண்டுவர இருப்பதையும், த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க முயற்சி நடப்பதையும் தெரிந்துகொண்டுதான் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், அமைச்சர்கள் நிர்மல்குமார், விஸ்வநாதன் ஆகியோர் கவர்னரை நேரில் சந்தித்து புகார் அளித்ததாக கூறப்படுகிறது.

ஆனால், கவர்னர் அர்லேக்கரோ, சட்ட ரீதியாக எந்த உதவியையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்றும், மாற்று வழியில் உதவி செய்ய முடியாது என்றும் கூறிவிட்டதாக தெரிகிறது.

அதன் அடிப்படையிலேயே,த.வெ.க.எம்.எல்.ஏ.க்களிடம் குதிரைபேரம்நடந்தது தொடர்பாக போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இனி, தமிழக அரசியலில் அடுத்தக்கட்ட பரபரப்பு என்ன நடக்கிறது? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை குறைந்தது



பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு19கிலோ எடையிலும், சமையல் கியாஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது. மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.172.50 குறைந்து ரூ.3.106-க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட சமையில் சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமுமின்றிரூ.957.50-க்கு விற்பனையாகிறது.

மேற்காசிய போர் சூழல் காரணமாக கடந்த 4 மாதங்களாக உயர்ந்து வந்தசிலிண்டரின்விலை தற்போது குறைந்துள்ளது. இதனால் வணிகர்கள் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "யங் இந்தியன் பார்லிமெண்ட் 2026" நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன என்பது குறித்து இளைஞர்களுக்கான இரண்டு நாட்கள் மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (1.07.2026) துவக்கி வைத்தார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில், 2025–2026 கல்வியாண்டில் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ப. கந்தராஜா மாணவ, மாணவியர்களுக்கு விருதுகளை வழங்கி பாராட்டினார்.

### அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை பறிக்கும் வகையில் தீர்ப்பு வழங்கிய

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் தீர்ப்பை கண்டித்து தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது



அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமையின் அடிப்படையில் இஸ்லாத்தைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டு வந்த 3.5 சதவிகித தனி இடஒதுக்கீட்டை ரத்து செய்துள்ள நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் சமீபத்திய தீர்ப்பு, தமிழகத்தின் சமூகநீதி வரலாற்றையும் அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் புறக்கணிக்கும் வருத்தமளிக்கும் தீர்ப்பாகும்.

தமிழகத்தில் முஸ்லிம் சமூகம் கல்வி, வேலைவாய்ப்பு,நிர்வாகப் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட பலதுறைகளில் கடுமையான பின்னடைவை எதிர்கொண்டுள்ள நிலையில், சமூக மற்றும் கல்வி அடிப்படையிலான ஆய்வுகளின் அடிப்படையில், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கையை ஏற்று, கலைஞர் கருணாநிதி 2007–ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு 3.5% தனி இடஒதுக்கீட்டை வழங்கினார், ஆனால் அவ்வாறு வழங்கபட்ட இட ஒதுக்கீட்டை பறிக்கும் வபையிர் தற்போது நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் தீர்ப்பு வழங்கியுள்ளார். தமிழ்நாடு அரசு இந்தத் தீர்ப்புக்கு எதிராக உடனடியாக உயர்நீதிமன்றத்தின் பெரிய அமர்வில் மேல்முறையீடு செய்து, பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கான 3.5% தனி இடஒதுக்கீட்டை சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பாதுகாக்க வேண்டும் என்றும், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், கோவை மத்திய மாவட்டத்தின் சார்பில், உக்கடம் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் டி.எம்.எஸ். அப்பாஸ்தலைமைதாங்கினார். மனித நேய மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர்கள் ஷாகுல் அமீது, பழனி ஃபாரூக், மாநில பிரதிநிதி சாதிக் அலி ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநில செயற்குழு உறுப்பினர் கவுன்சிலர் அகமது கபீர், தமுமுக மாவட்டத் தலைவர் சர்புதீன், தமுமுக மாவட்டச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான், மனிதநேய மக்கள் கட்சியின், மாவட்டச் செயலாளர் இப்ராகிம், தமுமுக மாவட்டப் பொருளாளர் அசாருதீன், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூர்தீன், ஷாஜகான், ஆஷிக் அகமது, அபு, ருசி மைதீன் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் கோடை விடுமுறையில் புத்தக வாசிப்பில் சிறந்த மாணவர்களுக்கு பரிசு

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில், கோடை விடுமுறைக் காலத்தில் புத்தகங்களை வாசித்து சிறப்பான பின்னூட்டங்களை வழங்கிய மாணவ, மாணவியரைப் பாராட்டும் வகையில் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.



விழாவிற்கு பள்ளி ஆசிரியை வினோதா வரவேற்புரை வழங்கினார்.பள்ளித்தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக தேவகோட்டை சார் நிலை கருவூல அலுவலர் கருணாநிதி கலந்து கொண்டு, புத்தக வாசிப்பில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். அப்போது அவர் பேசியதாவது:

"ஒரு புத்தகத்தை வாசிப்பது மட்டுமல்ல, அதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொண்டோம் என்பதைப் பதிவு செய்து சிந்திப்பதும் மிகவும் முக்கியமானது. புத்தக வாசிப்பு நேரத்தை பயனுள்ள வகையில் செலவிட உதவுவதோடு, நினைவாற்றல், பேச்சுத்திறன், சிந்தனைத்திறன் மற்றும் பொதுஅறிவை மேம்படுத்துகிறது.

ல்ல புத்தகங்கள் மனிதனின் குணநலன்களை வளர்க்கின்றன. உலகில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள் தொடர்ந்து வாசிக்கும் பழக்கத்தை வளர்த்ததாலேயே உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். எனவே, மாணவர்கள் புத்தக வாசிப்பை வாழ்வின் ஒரு அங்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

வாசிப்பின் மூலம் கிடைக்கும் கருத்துகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பழக்கமும் வளரவேண்டும். இதன் மூலம் தன்னம்பிக்கை, மொழித்திறன் மற்றும் வெளிப்படுத்தும் திறன் அதிகரிக்கும்.

புத்தகங்களுடன் செய்தித்தாள்களையும் தினமும் வாசிக்க வேண்டும். குறிப்பாக தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களை வாசிப்பது மொழி அறிவையும், சமகால நிகழ்வுகள் குறித்த விழிப்புணர்வையும் அதிகரிக்கும். போட்டித் தேர்வுகளில்வெற்றிபெற நடப்புநிகழ்வுகள் குறித்த அறிவு மிகவும் அவசியம்.ஒருதேர்வில்வெற்றி பெற முடியாவிட்டாலும் மனம் தளரக் கூடாது. இன்னும் பல வாய்ப்புகள் உள்ளன.தொடர்ந்து முயற்சிசெய்தால்வெற்றி நிச்சயம்.

வாழ்க்கையில் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. ஒரு வாய்ப்பு தவறினாலும், அடுத்த வாய்ப்பை உறுதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கனவு காண வேண்டும்; அந்தக் கனவை நனவாக்க இலக்கை நோக்கி தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

நான் கருவூல அலுவலராகப் பணியாற்றும் நிலையில் இருப்பதற்கு தொடர்ந்து கற்றலும் வாசிப்பும் காரணமாக அமைந்துள்ளன. என் தந்தை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவருடைய ஓய்வூதிய ஆவணங்களில் அதிகாரியாக கையொப்பமிட்ட தருணம் என் வாழ்வின் மறக்க முடியாத பெருமையான தருணமாகும்" என்று மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரையாற்றினார்.

தொடர்ந்து, கோடை விடுமுறையில் புத்தகங்களை வாசித்து சிறந்த முறையில் கருத்துகளை பதிவு செய்து பின்னூட்டம் அளித்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி மேற்கொண்ட இந்த முயற்சியை பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாராட்டினர்.

நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றியுரை வழங்கினார்.

### கோவை சுப்பிரமணியம் பாளையம் பகுதியில் உள்ள

# அன்னை வயலெட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவ பிரதிநிதிகள் பதவியேற்பு விழா

## மாணவர்களின் அணிவகுப்பு பேரணி நடைபெற்றது




கோவை சுப்பிரமணியம் பாளையம் பகுதியில் செயல்பட்டு வருகிற அன்னை வயலெட் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்நிலையில் பள்ளியின் செயலர் பிரேம்குமார் மற்றும்துணைச்செயலர் பிரேம்சந்த் ஆகியோரின் ஆலோசனையின் படி பள்ளி மாணவப்பிரதிநிதி, துணை பிரதிநிதி மற்றும் பள்ளியில் செயல்படும் நான்கு குழுக்கள் தலைவர்கள், துணைத் தலைவர்கள் தேர்வு நடைபெற்று அவர்களுக்கானபதவிஏற்புவிழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக துடியலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் ராஜபாரதி மற்றும் தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பள்ளியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் பேண்ட் வாத்தியம் முழங்க சிறப்பான வரவேற்பு வழங்கினர். தொடர்ந்து பள்ளியின் பிரதிநிதி, துணை பிரதிநிதி, 4 குழுக்களின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் பொறுப்பை ஏற்கும்முன் மாணவர்களின்அணிவகுப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் புல்ஸ் அணி, ஈகிள்ஸ்அணி,பேன்த்தர்ஸ் அணி, ரெய்னோஸ் அணி உள்ளிட்ட அணியினர் கைகளில் தங்களது கொடியினை ஏந்தி பேரணியாக வந்து பள்ளி மைதானத்தில் நிறுவினர். மேலும் பள்ளிமாணவர்தலைவர், துணை தலைவர், புல்ஸ் அணி தலைவர், துணைத் தலைவர், ஈகிள்ஸ் அணி தலைவர், துணை தலைவர், பேன்த்தர்ஸ் அணி தலைவர், துணைத் தலைவர், ரெய்னோஸ் அணிதலைவர்,துணை தலைவர் ஆகியோர் பதவியேற்றுகொண்டனர். அவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பேட்ஜ் அணிவித்து பதவிப்பிரமாணம் செய்து வைத்து குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். பள்ளியில்தேர்வுசெய்யப்பட்ட மாணவப் பிரதிநிதி, துணை பிரதிநிதி மற்றும் குழு பொறுப்பாளர்கள் தங்கள் கடமையை சரிவர செய்வோம் என அனைவரின் முன்னிலையில் கைகளை உயர்த்தி உறுதிமொழி எடுத்துகொண்டனர்.

தொடர்ந்து இந்நிகழ்ச்சியில்பேசியதுடியலூர் காவல் நிலைய உதவிஆய்வாளர்ராஜபாரதிகுழந்தைகளுக்கு தேவையான அறிவுரைகளையும், குழந்தைகள் தங்களை எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும் என அழகாக மேற்கோளுடன் அறிவுறுத்தினார். மேலும் போதைப் பொருள் பயன்பாடு, பாலியல் வன்கொடுமை, அலைபேசி பயன்படுத்த கட்டுப்பாடு உள்ளிட்டவைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்.

பள்ளியின் முதல்வர் அக்ரியா ஜான்சி மற்றும் அன்பு வடிவு ஆகியோரின் மேற்பார்வையில்விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள்கலந்துகொண்டனர். இறுதியில் தேசிய மாணவர் படை மாணவர்களின் பேண்ட் வாத்திய நாட்டுப் பணிவுடன் விழா நிறைவடைந்தது.

# கோவை பங்கஜா மில்ஸ் சாலையில் உள்ள ஜெம் மருத்துவமனையில் ஆபரேஷன் இன்ஃபினிட்டி திட்டம் துவங்கப்பட்டுள்ளது

## சென்னை மற்றும் கோவையை இணைக்கும் இந்தியாவின் முதல் இரு நகர ரோபோட்டிக் அறுவை சிகிச்சை நெட்வொர்க்கை துவங்கியது



இரைப்பை குடலியல் மேம்பட்ட லேப்ராஸ்கோபிக் மற்றும் ரோபோடிக் அறுவை சிகிச்சைகளில், இந்தியாவின் முன்னோடி மருத்துவமனை என்று பெயரை பெற்றுள்ள ஜெம் மருத்துவமனை, தற்பொழுது ஆபரேஷன் இன்ஃபினிட்டி என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தை அதிகாரப்பூர்வமாக அறிமுகம் செய்துள்ளது. பெருநகர எல்லைகளைக் கடந்து, நிகல் நேர மருத்துவக் கூட்டு உழைப்பு, மற்றும் உயர்தர மருத்துவ வசதிகளை,நோயாளிகள் எளிதாக பெற வேண்டும் என்ற நோக்கில், உருவாக்கப்பட்டு, இந்தியாவின் முதல் இரு நகர ரோபோடிக் அறுவை சிகிச்சை நெட்வொர்க் இதுவாகும். இத்திட்டம் சென்னை மற்றும் கோவையில் உள்ள ஜெம் மருத்துவமனைகளில் ரோபோட்டிக் அறுவை சிகிச்சை உள்கட்டமைப்பை தடையின்றி இணைகின்றது எனவும், இதன் மூலமாக நிபுணத்துவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள், எந்த ஒரு கால தாமதமும் இல்லாமல் நேரலை வழிகாட்டுதல்களை வழங்கிட முடியும் எனவும், நோய்களை கண்டறியவும், தரவுகளை பகிர்ந்து கொள்ளவும் சிக்கலான அறுவை சிகிச்சைகளில், தூரத்தில் இருந்து இணைந்து செயல்பட முடியும் என தெரிவிக்கபட்டுளள்து. இந்த திட்டம் குறித்து ஜெம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் சி பழனிவேலு, மற்றும் ஜெம் மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரியும், இணை நிர்வாக இயக்குனருமான டாக்டர் பி பிரவீன் ராஜ் கூட்டாகசெய்தியாளர்களிடம் கூறியதாவது..

நவீன மருத்துவத்தில் புவியியல் எல்லைகள் என்பது மருத்துத்திற்க்கு, இனி ஒரு தடையல்ல என்பதை இந்த திட்டம் நிரூபிக்கிறது எனவும், ரோபோட்டிக் அறுவை சிகிச்சை துறையில், இது ஒரு புதிய மைல்கல்லை எட்டி உள்ளதாகவும், நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் துல்லியமான சிகிச்சையை மேம்படுத்துவதோடு, மட்டுமின்றி வருங்கால அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு இது ஒரு சிறந்த கற்றல் வாய்ப்புகளையும் வழங்கும் என்றனர். எங்களது சென்னை, மற்றும் கோவை மையங்களை இணைப்பதன் மூலமாக, சிக்கலான அறுவை சிகிச்சை முறைகளை, கையாளுவதில் மிக உயர்ந்த தரத்தையும், துல்லியத்தையும் எங்களால் உறுதி செய்ய முடிகிறது என்று தெரிவித்தனர். ரோபோட்டிக்அறுவை சிகிச்சை செயல் முறையில், கோவை ஜெம் மருத்துவமனையில் இருந்து, கணைய புற்று நோய்க்கான சிக்கல்களை டாக்டர் பழனிவேலு, புற்றுநோய் பாதிப்பை அகற்றியும், சென்னையில் இருந்து, டாக்டர் செந்தில்நாதன் உடற்கூறு மறு சீரமைப்பு பகுதியையும், வெற்றிகரமாக செய்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த திட்டம் மருத்துவத்துறைக்கு ஒரு புதிய அடையாளமாக திகழும் என நம்புவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "யங் இந்தியன்ஸ் பார்லிமெண்ட் 2026" நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன என்பது குறித்து இளைஞர்களுக்கான இரண்டு நாட்கள் மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (1.07.2026) துவக்கி வைத்தார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன் உட்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மேலச்சண்முகபுரம், வண்ணார் 3ம் தெரு தொடர்ச்சி பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் கொடைவிழா வெகு சிறப்பாக கடந்த 23ஆம் தேதி கால் நாட்டு விழாவுடன் துவங்கி திருவிழா 9 நாட்கள் நடைபெற்றது. இதில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரமும் சிறப்புப் பூஜைகளும், தீபாராதனைகளும் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 8ஆம் நாள் கொடைவிழாவை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி மேயா் ஜெகன் பொியசாமி கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து பின்னர் மதியம் 12 மணி அளவில் அன்னதானத்தை தொடங்கிவைத்தா்.இதில்2000மேற்பட்டஏராளமானபக்தர்களுக்குகலந்துகொண்டனர்.கோவில்விழாஏற்பாடுகளையும் கோவில் தலைவர் மற்றும் தர்மகர்த்தா கோட்டுராஜா தலைமையில் மேற்கு மண்டலத்தலைவா் அன்னலட்சுமி முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கோவில் நிர்வாகிகள், கொடைவிழா ஆலோசகர்கள், இளைஞர் அணி & மகளிர் அணியினர் கொடைவிழா குழுவினர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மேலவளைவு படுகொலை 29ஆம் ஆண்டு நினைவு நாள்: வேப்பூரில் விசிக சார்பில் அஞ்சலி!



மதுரை மாவட்டம் மேலவளைவு படுகொலையின் 29-ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, கடலூர்மாவட்டம்வேப்பூரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் செவ்வாய்க்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 1997-ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதி மதுரை மாவட்டம் மேலவளைவு ஊராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர் முருகேசன் உள்ளிட்ட 7 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் 29-ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி,கடலூர்மாவட்டம் வேப்பூர் கூட்டுரோட்டில் விசிக சார்பில் செவ்வாய்க்கிழமை நினைவஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மேலவளைவு முருகேசன் உள்ளிட்ட 7 பேரின் உருவப்படங்களுக்கு மலர்தூவி, வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு, கட்சியின்நல்லூர்வடக்கு ஒன்றியச் செயலாளர் கொத்தனூர் பெ. சுரேஷ், நல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் கெங்கா. முத்துவளவன் ஆகியோர் தலைமை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட துணைச் செயலாளர் நாரையூர் பெரியசாமி, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் பரம. சங்கீதா ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மேலும், நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் பழக்கடை பிரகாஷ், சித்தூர் சத்குரு, திருப்பெயர் சத்யகலா, நல்லூர் மேற்கு ஒன்றியப் பொருளாளர் யா. முனுசாமி, துணைச் செயலாளர்கள் மணிகண்டன், கொத்தனூர் நவீன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் சேப்பாக்கம் சத்தியவான், வேப்பூர் பாக்கியராஜ், பாலு மகேந்திரன், பொடையூர் ராஜா, திருப்பெயர் சேவாக், ஆதியூர் பூவரசன், கோ.கொத்தனூர் வெங்கடேசன் உள்ளிட்ட பலரும் பங்கேற்று உயிர்நீத்தோரின் நினைவிற்கு அஞ்சலி செலுத்தினர்.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அண்ணாமலையின் இது நம்ம இயக்க உறுப்பினர் சேர்க்கை முகாம் நாகர்கோவில் அருகே நேசமணி நகர் ராணி தோட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை அருகே அமைந்துள்ள அலுவலகத்தில் " வீத லீடர்ஸ் " இயக்கம் பைரவி பவுண்டேஷன் சோபா தலைமையில் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இயக்கத்தில் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வீதி லீடர்ஸ் இயக்கத்தின் வளர்ச்சி பற்றி சோபா எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் வீதி லீடர்ஸ் அமைப்பின் சார்பில் சோபா மரக்கன்றுகளை வழங்கினார். உடன் மகேஷ், சகாதேவன் , ரேவதி, ஐயப்பன், உட்பட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# மதுராந்தகம் ஏரிகாத்த கோதண்டராமர் கோவில் பெரிய தேரோட்ட விழா பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் எழுந்தருளி இருக்கும் வரலாற்று சிறப்புமிக்கஸ்ரீ ஏரிகாத்த கோதண்டராமர் திருக்கோவில் ஆனி பிரம்மோற்சவ விழாகடந்த 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது மொத்தம் 11 நாட்கள் பிரம்மோற்சவ விழா நடைபெறும்

இன்று எட்டாம் நாள் விழாவில் பெரிய தேரோட்டம் நிகழ்ச்சி காலை நடைபெற்றது தேரோட்டத்தை மதுராந்தகம் நகர மன்ற தலைவர் மலர்விழி குமார் தொடங்கி வைத்தார்.

இந்த திருத்தேரில் ஸ்ரீதேவி பூதேவி கருணாகர பெருமாள் வலம் வந்தனர் பலஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து கோவிந்தா கோவிந்தா என சரணகோஷம் உடன் தேரை இழுத்தனர்.

## மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில்

# சோளங்குருணி கழுவன்குளம் சாலையில் அரசு பேருந்து வராததை கண்டித்து சாலை மறியல்



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குதிரை குத்தி குசுவன் குண்டு, இராமன் குளம், கிளா நேரி, இலந்தை குளம்,தின்னா நேரி, கோணபட்டி, ஆகிய ஏழு கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் காலை மாலை ஆகிய இரு வேலைகளில் முறையாக அரசு பேருந்துகள் இயக்கப்படாததால் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் இங்கிருந்து இரண்டு கிலோமீட்டர் தற்று உள்ள சோழமுரிணி கிராமத்திற்கு சென்று பஸ் ஏறி பள்ளிகளுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது மேலும் மாலை நேரங்களில் பேருந்து வராத காரணத்தால் இரவு 7 மணிக்கு மேல் வருவதால் பாதுகாப்பின்மை சமூக விரோதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாகவும் பொதுமக்கள் மற்றும் மாணவிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த ஒரு வருடமாக 56 குதிரை குத்தி பேருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது .இதனால் அருகில் உள்ள கிராமங்களுக்கு சென்று வரும் பேருந்தில் மாணவ மாணவிகள் வேலைக்கு செல்லும் கிராம மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால் பேருந்தில் இடமில்லாத காரணத்தினால் செல்ல முடியாமல் தாமதம் ஏற்படுகிறது

ஆகையால் முன்பு 56 குதிரை குத்து பேருந்து இயக்கி கிராம மக்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு பயனடையுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும் என போக்குவரத்து துறை அதிகாரியிடம் பல்வேறு முறை மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

இதனைத் தொடர்ந்து குதிரை குத்தி கிராம மக்கள் கழுவன் குளம்சாலையில் மறியல் செய்தனர் இரண்டு மணி நேரமாக நடைபெற்று வரும் சாலை மறியலில்போக்குவரத்துகழகஅதிகாரிகளோ வருவாய் துறை அதிகாரிகளோ பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்த வரவில்லை இதனால் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகள் கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து பல்லு மாணவி கலைச்செல்வம் கூறுகையில் காலை 7 மணிக்கு வர வேண்டிய பஸ் எட்டு மணிக்கு மேல் வந்து நாங்கள் பள்ளிக்கு செ பள்ளியில் 9:00 மணிக்கு மேல் செல்வதால்வெளியில் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது

அதேபோல் மாலை நேரத்தில்பள்ளி முடிந்து பஸ் கிடைக்காமல் வீட்டுக்குவரஏழுமணிமேல் ஆகிறது அதனால்இருட்டில் நடந்து வர பயமாக உள்ளது உரிய நேரத்தில் பள்ளி செல்ல எங்களுக்கு பஸ் கிடைக்க அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் .

## தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு

# கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனையில் தேசிய மருத்துவர்கள் தினம் கொண்டாடப்பட்டது

## மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது



அசோசியேஷன் ஆப் அலையன்ஸ் க்ளப் இன்டர்நேஷனல் மாவட்டம் 250 எஸ் அமைப்பு மற்றும் கோவை சிங்காநல்லூர் விஜிஎம் மருத்துவமனை இணைந்து,தேசியமருத்துவர்கள் தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனையில் நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், அலையன்ஸ் மாவட்ட ஆளுநர் ஜி.சுந்தரம் தலைமை தாங்கி, விழாவினை துவக்கி வைத்தார்.

மேலும் இவ்விழாவில் மாவட்ட சுகாதார இணை இயக்குநர் டாக்டர் வி. சுமதி மற்றும் விஜிஎம் பவுண்டேஷன் அமைப்பின் நிர்வாக அறங்காவலர்டாக்டர்வி.ஜி.மோகன் பிரசாத்மற்றும்சர்வதேச அலையன்ஸ் சங்கத்தின் இயக்குனர் என். ராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மருத்துவர்கள் தின சிறப்புரையா ற்றினார்.தொடர்ந்துகோவை மாவட்டத்தில் சிறந்த மருத்துவசேவை புரிந்த 14 மருத்துவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டது.

விழாவில் சங்கத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் அலையன் குணசேகரன், அலையன் விஜயகுமார், அலையன் ஸ்ரீனிவாசன், மற்றும் அலையன் ராஜேஷ் குமார் வாழ்த்துரை வழங்கினர். விஜிஎம் மருத்துவமனையின் எலும்பு மற்றும் மூட்டு மாற்று அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் சுமன் வரவேற்புரையாற்றினார்.

விழாவின் இறுதியாக அலையன்ஸ் மாவட்ட இரண்டாம் துணை ஆளுநர் அலையன்ஸ் பிரபாகரன் நன்றியுரை வழங்கினார். இந்த விழாவில் விஜிஎம் மருத்துவமனையின் மருத்துவவர்கள் மதுரா பிரசாத், மித்ரா பிரசாத், வம்சி மூர்த்தி, மற்றும் அலையன்ஸ் சங்க மாவட்ட செயலாளர்கள் ரவீந்திரன், ராய் தாமஸ், அமைச்சரவை ஆலோசகர் பாலசுப்பிரமணியம், தலைவர் டாக்டர் சுபத்ரா ஐயங்கார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமங்கலம் அருகே திமுக பிரமுகர் இரவில் மர்ம நபர்களால் வெட்டி கொலை

## முன்விரோதம் காரணமா? தப்பி ஓடிய மர்ம கும்பல் போலீசார் தீவிர விசாரணை

மதுரை மாவட்டம் திருமங்கலம் அடுத்த கள்ளிக்குடி தாலுகா இலுப்பங்குளத்தை சேர்ந்தகலாநிதி 35திமுக பிரமுகரான (முன்னாள் கள்ளிக்குடி ஒன்றிய இளைஞரணி செயலாளர்) இவர் நேற்று இரவு 11 மணி அளவில் கள்ளிக்குடியிலிருந்து இரு சக்கர வாகனத்தில் கே. சென்னம்பட்டியை சேர்ந்த ஹரிஹரன் 30 மற்றும் இலுப்பங்குளத்தைச் சேர்ந்த கலாநிதி உறவினர் அஜித் 25 குராயூருக்கு சென்ற போது சோளம் பட்டி குதிரை கோவில் அருகே பின்னால் பொலிரோ காரில் துரத்தி வந்த ஒரு கும்பல் இரண்டு சக்கரவாகனத்தின் மீது மோதியதில் மூன்று பேரும் கீழே விழுந்தனர். அப்போது காரில் இருந்த கும்பல் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களோடுவருவதைகண்ட ஹரிஹரன் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். இந்த நிலையில் அந்த கும்பல் கத்திஉள்ளிட்ட ஆயுதங்களால்கலாநிதியை சரமாரியா வெட்டினர். கலாநிதி உடன் வந்த உறவினர் அஜித்தையும் வெட்டு காயத்துடன் அஜித் தப்பி ஓடி விட்டார்.






இந்த நிலையில் கலாநிதி முகம் கழுத்து கை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சரமாரியாக வெட்டியதில் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து கலாநிதி சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளார். இந்நிலையில்தப்பி ஓடிய அஜித் சம்பவம் தொடர்பாக போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளார். சம்பவ இடத்திற்கு வந்த கள்ளிக்குடி போலீசார் இறந்த கலாநிதி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மேலும் காயமடைந்த அஜித்தையும்விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். தொடர்ந்து கொலை சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.மாவட்ட எஸ்பி உத்தரவின் பேரில் குற்றவாளிகளை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டு தப்பி ஓடிய மர்ம கும்பலை போலீசார் தேடி வருகின்றனர். இறந்த கலாநிதிக்கும் மற்றொரு கும்பலுக்கும் ஏற்கனவே ஆற்றில் மணல் அள்ளுவது தொடர்பாக தகராறு இருந்துள்ளது இதனால் அந்த கும்பல் கலாநிதியை கொலை செய்தார்களா?அல்லது வேறு யாருக்கும் இந்த கொலை சம்பவத்தில் தொடர்புள்ளதா?என போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்.ஸ்டாலின், சிறப்பான மற்றும் முன்மாதிரியான காவல் பணிக்காக முதலமைச்சர் ஜோசப் விஜய் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# ஈரோடு மாநகராட்சி 28வது வார்டு தூய்மைப் பணியாளர்களுக்குப் பணி நிறைவு பாராட்டு விழா: மறைந்த மாமன்ற உறுப்பினரின் மனைவி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிப்பு


ஈரோடு மாநகராட்சியின் 28-வது வார்டில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியதூய்மைப்பணியாளர்கள் சுசிலா, மனோகர் மற்றும் முருகேஷ் ஆகியோரின் பணி நிறைவு பாராட்டு விழா அந்த வார்டின் சார்பில் நடைபெற்றது.

இந்த விழாவில், 28-வது வார்டின் முன்னாள் மாமன்ற உறுப்பினராக இருந்து அண்மையில் மறைந்த செந்தில்குமாரின் மனைவி கல்பனா தாமாகவே முன்வந்து கலந்துகொண்டு, பணி நிறைவு பெற்ற தூய்மைப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி கௌரவித்தார். மறைந்த மாமன்ற உறுப்பினர் செந்தில்குமார், தனது வார்டு பொதுமக்களிடமும் அங்கு பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களிடமும் எப்போதும் நண்பராகப் பழகும் குணம் கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் மறைந்தாலும் தங்களின் மீது அவர் கொண்டிருந்த நட்பை மறக்கக் கூடாது என்ற நோக்கில், அவரது மனைவி கல்பனா தங்களது பணி நிறைவு விழாவில்சிறப்புஅழைப்பாளராகக் கலந்துகொண்டு நினைவுப் பரிசு வழங்கியதற்குத்தூய்மைப்பணியாளர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். மேலும் இந்த விழாவில் துப்புரவு பணியாளர்கள் நல்லசாமி, பூபாலன், சதீஷ் உட்படப் பல முக்கியப் பிரமுகர்களும், பணி நிறைவு பெற்ற தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினரும் பெருமளவில் கலந்துகொண்டனர்.





நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்கள் பாதுகாப்பாகவும் சிரமமின்றியும் நடைபாதைகளில் நடந்து செல்லும் வகையில், இடையூறாக அமைக்கப்பட்டுள்ளவிளம்பரபலகைகளைஅகற்றும்பணியில்மாநகராட்சிபணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம் தாளவாடி அடுத்த தலமலை வனச்சரக கிராமங்களுக்குள் புகுந்து, வனவிலங்குகள் ஆடு மாடுகளை தாக்கி வருகின்றன. கடந்த வாரம் பெஜலட்டி மற்றும் காளிதிம்பம் கிராமங்களில் புலி தாக்கியதில் பசு மாடுகள் பலியாயின. இதையடுத்து, தலமலை வனச்சரகர் ஆர்.ரவிச்சந்திரன் தலைமையில், பாதிக்கப்பட்ட மாடுகளின் உரிமையாளர்களான நாகராஜ் மற்றும் நீலி ஆகிய இருவருக்கும் தலா ரூ.30 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கினார்.



ஈரோடு மாவட்டம் மயிலாடி அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவர் மன்ற துவக்க விழா நடைபெற்றது. தலைமை ஆசிரியை தேவகி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாணவமாணவிகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். தொடர்ந்து மாணவர் மன்ற புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

# Mahua Moitra shares video of egg attack during TMC meeting in Bengal: 'Police watching the fun'

Trinamool C ong ress MP Mahua M o itr a on Wednesday said she was injured after she shared a video of a group of people hurling eggs at a venue where she was meeting party workers in West Bengal.

Taking to X, Mahua Moitra wrote: "Currently being attacked by @ bjp4india goons with @ wbpolice watching on." She also shared a video purportedly from the spot.

In the video shared by the TMC MP, men in a crowd can be seen throwing eggs towards a window of the building from where she is heard speaking inside. The footage also shows people cheering after the eggs hit the window.

In another video message addressed to West Bengal DGP Siddh Nath Gupta, Mahua Moitra alleged that a mob gathered outside a party meeting at a private office in her constituency and pelted eggs and stones at the venue, injuring her when she approached a window.

She claimed she had called the DGP and shared the location, but alleged that while police arrived, they did not disperse the crowd and instead "stood and watched" as the attack continued, urging the top cop to intervene and fulfil the police's duty of dispersing the mob.

The egg attack during Trinamool Congress (TMC) MP Mahua Moitra's meeting with party workers is not an isolated incident, with several similar cases reported involving TMC leaders in West Bengal in recent weeks. The pattern of such incidents reportedly began with TMC national



general secretary Abhishek Banerjee. On May 30, during a visit to Sonarpur to meet families affected by alleged post-poll violence, he was allegedly attacked with stones and eggs. The incident reportedly left him with minor injuries. Videos from the spot showed a group of people heckling and roughing up the TMC leader amid sloganeering. Abhishek called the incident "political violence and state-sponsored terrorism" and expressed gratitude to Rahul Gandhi for standing by him.

On June 15, TMC MLA Kunal Ghosh was also targeted when eggs were hurled at him outside party supremo Mamata Banerjee's Kalighat residence in south Kolkata, shortly after he stepped out. Following the incident, Ghosh filed a complaint at Kalighat Police Station, seeking immediate action against those involved. In another incident, TMC youth leader Soumitra Banerjee was allegedly attacked with eggs while being taken to court by West Bengal Police. The attack reportedly took place after his arrest based on a complaint filed by BJP leader Ravi Keshari, who accused him of attacking BJP workers.

# சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த இளைஞருக்கு 20 ஆண்டு சிறை



சென்னை:

திருமணம் செயது கொள்வதாகக்கூறி 17 வயது சிறுமியை ஏமாற்றி பாலியல் வன்கொடுமை செய்ததுடன், வீட்டில் இருந்த தங்க நகை மற்றும் பணத்தையும் மிரட்டி பெற்ற இளைஞருக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்து சென்னை அல்லிக்குளம் மகளிர் சிறப்பு நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞரான ஞானப்பிரகாஷ் அசோக்நகர் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமியை காதலித்து வந்துள்ளார். திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஞானப் பிரகாஷ் அந்த சிறுமியை பலமுறை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அப்போது அந்த சிறுமி தன்னை திருமணம் செய்து கொள்வதாகக்கூறிய இளைஞரிடம் தங்க நகை மற்றும் தொகையை கொடுத்தது மட்டுமில்லாமல், தன்னை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்த விவரங்களையும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் அசோக் நகர் அனைத்து மகளிர் போலீஸார் கடந்த 2022-ம் ஆண்டு போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து ஞானப்பிரகாஷை கைது செய்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.